அருள்மிகு அன்னை ஸ்ரீ பிரம்மகாளி தேவி துணை

18.3.2011

வெள்ளிக்கிழமை

# (READY TO REVOLUTION)

எழுமின் விழுமின்

**manikandamayilvel@gmail.com**

**Cell: 9750033845**

அன்பிற்கினிய ஆதரவற்ற எனதருமை வேட்டுவா் குலச் சொந்தங்களே! இளைஞா்களே! எனது இனத்தின் இளம் பெண்களே! நாளை எம்மைப் போல் சமுதாயத்தில் நலிந்து இருக்கப்போகும் வருங்காலச் சிங்கங்களே! அனைவரும் நலமாக! வீடு, வீடுண்டு, தோட்டம், தோட்டமுண்டு, காடு கழனியுடன் மட்டுமே சுற்றிக் கொண்டு, படிப்பு, தொழில், குடும்பம், என நமது வீர வேட்டுவக்கவுண்டா் பரம்பரையை வளா்த்துக் கொண்டு, ஆண்டாண்டு காலம் நாடாண்ட நம் இனம், நம்மிடம் மாண்டாருக்கு கறிவேப்பிலையாய் நீடுழி வாழ வாழ்த்துகிறேன்.

இந்திய துணைக் கண்டத்தின் பூா்வ குடிகளாகிய நாம் இன்று இந்த தமிழ் நாட்டு அரசியல் கள சமுதாயத்தில் நமக்கிருக்கும் அவல நிலையை எண்ணிபாருங்கள், வேண்டிய அனைவரையும் வேண்டியபடி கை கொடுத்த நாம் இன்று அடுத்தவரிடம் கையேந்த வேண்டிய நிலையை, என் ரத்தங்களாகிய உங்களைத் தவிர நான் வேறு யாரிடத்தில் கண்ணீா் விட்டு கதற முடியும்? ஒவ்வொரு வீர வேட்டுவத்தாய் ஊட்டி வளா்த்த தாய்ப்பாலின் வீரம் எங்கே ஒளிந்துள்ளது ?

கடந்த 2006 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தோ்தலில் ஒரு தொகுதி. அதுவும் கட்சி சாா்பாக. அந்த ஒரு தொகுதியாவது இப்போது 2011 பொதுத் தோ்தலில் கிடைக்குமா? என்றால் அது தனித்தொகுதியாகி நீரு பூத்த நெருப்பாகிவிட்டது. சரி, நமக்கு சாதகமான தொகுதிகளில் ஒரு தொகுதியாவது கிடைக்குமா என்று பாா்த்து பாா்த்து கண்கள் பூத்து போன உங்களைப்போல வேட்டுவச் சாமானியா்களில் நானும் ஒருவன்.

நமக்கெல்லாம் ஓட்டு போட ஓட்டு இருக்கிறது. ஆனால் நமக்கு ஓட்டு போட ஆளில்லை. அப்படித்தான் நினைக்கிறதா இத்தனை கட்சிகளும் ?

மௌரியப் பேரரசாக நாம் நாடாளவில்லையா ? இல்லை வேட்டுவ குல குகனாக நாம் காடாளவில்லையா ? நமக்கு மட்டும் ஏன் இந்த பாரபட்சம் ?

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளுக்குள் நமக்கென வேலை என்றுதானே ஒரு பத்து பிரதிநிதித்துவத்தை தர எந்த ஒரு கட்சியும் முன் வரவில்லை? சுமாா் பதினைந்திலிருந்து இருபது தொகுதிகள் நம் சமுதாய வாக்கு அதிகமுள்ள தொகுதிகள்.

இந்த தொகுதிகளில் நாம் தான் ஒரு வேட்பாளரை அறுதியிட்டு வெற்றி பெற வைக்க இயலும். அந்த சக்தி நம்மிடம் இல்லையா ? இல்லை நாம் சோர்ந்து விட்டோமா ?

**ஓ சமுதாயமே!**

இனிமேலும் நாம் தூங்கிக்கொண்டிருந்ததும், நமக்குள் நாமே தொங்கிக்கொண்டிருந்ததும் போதும். நிற்க!.

வீர வேட்டுவகுலச் சமுதாயத்தின் அனைத்து சங்கங்களும், மன்றங்களும், சார்பு அமைப்புகளும் ஒன்றினைந்து நாம் ஏன் அனைத்து கட்சிகளையும் புறக்கணிக்கக்கூடாது?, ஏன், இது சாத்தியப்படாதா? சாதிக்கத்தான் முடியாதா?

நம் சமுதாயத்தின் லட்சோப லட்ச மக்களை புறக்கணித்த இந்த பல கட்சிகளை நாம் புறக்கணிக்கக்கூடாதா? எத்தனை நாள்தான் நாம் வெறும் களிமண் பொம்மைகளாக, அடுத்தவர்களுக்கு பல்லக்கு தூக்கிகளாகவே இருப்பது?

ஒரு நிமிடம்! நமக்காக இல்லாமல் நம் முன்னோர்களுக்காகவும், நம் வருங்காலங்களுக்குமாவது நம்மை நிலை நிறுத்திக் கொள்ளும் இந்த பொன்னான ஒரு பாவச் செயலையாவது (!) நாம் செய்யக்கூடாதா?

இல்லை! நம் வீர வேட்டுவக் கவுண்டர் வாழும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கறுப்புக் கொடி ஏற்றியாவது ஒரு மௌனப் புரட்சி நடத்தக் கூடாதா?

ஒரு சரித்திரம் என்பது இன்று!

அதில் சாதனைதான் வரும் நாளை!

வரும் சோதனைகள் எல்லாம் இடைவேளை!

என்று நமது வருங்கால சமுதாயம் இதை ஒரு வரலாறாக கொண்டாடுமே! இந்த வெற்றி போதாதா? நாம் அடுத்த அடி சிங்க நடையாய் எடுத்து வைக்க !

நமக்கென்ன என்று ஒவ்வொருவரும் நினைப்பதால்தான் நம் சமுதாயத்தை எண்ணி துடிதுடித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வீர வேட்டுவ இளைஞனும் அடிஎடுக்க யோசித்து நிற்கிறான். வேறு யாரையும் குற்றம் சொல்ல முடியாத நிலையில் குழம்பி நிற்கிறான். எனவே ஒருங்கிணைந்த நம் சமூகம் ஒற்றுமையாய் இருக்கும் வரை நாம் யாரிடமும் ஓரிரு தொகுதிக்காக கையேந்தி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. நமது பலத்தை நாம் தக்க வைத்துக் கொள்ளவும் முடியும். நமது சமுதாயத்தின் ஒட்டுமொத்த உறுதியையும் யாராலும் கூறு போடாத நிலைமையில் நாம் ஒன்றுபட்டு நின்றோமானால் இந்த கொங்கு மண்ணில் நம் கொடி பறக்கும் நாள் வெகுதூரம் இல்லை.

## <u>பின்குறிப்பு</u>

தமிழ்நாடு வேட்டுவக்கவுண்டர் சங்கம், கொங்கு நாடு வேட்டுவக் கவுண்டர் சங்கம், ஒருங்கிணைந்த தமிழ்நாடு வேட்டுவக் கவுண்டர் சமூகநலச்சங்கம், காளிசேனை, கண்ணப்பர் கலை மன்றம் மற்றும் அனைத்து பிற சார்பு சங்கங்களின் நிர்வாகிகளுக்கு எனது ஓர் முள்ளிவாய்க்கால் முனை வேண்டுகோள் !

**ஐயா, சங்கத் தலைவர்களே!**

மன்னனுக்கெல்லாம் மன்னனாக வாழ்ந்து அனைவரையும் வாழ வைத்த பூர்வ குடிகள் நாம். இன்று அடுத்தவர்களிடம் கையேந்தி பிச்சை எடுக்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இந்நிலை இனிமேலும் நீடித்தால் அடிமைகளுக்கு அடிமையான ஒரு வரலாறு நம் வருங்கால சந்ததிகளின் தலையில் தான் விழும் .

இனிமேலும் நீங்கள் பல சங்கங்களை கட்டமைத்தாலும், கூட்டமைத்தாலும் நாம் முதன் முதலில் மாநாடு நடத்தியதை பார்த்து மாநாடு நடத்தியவர்கள் எல்லாம், எல்லைக் கோட்டை தொட்டுவிட்டார்கள். அதாவது அவர்களுக்கென்று அரசியல் கட்சிகள் உரிய பிரதிநிதித்துவம் தரவும் முன் வந்துவிட்டன. ஆனால் நாம் தான் இன்னும் நின்ற இடத்திலேயே ஓடிக்கொண்டிருக்கிறோம். **ஏன் நீங்கள் எல்லாம் ஒருவருக்கொருவர் மனதளவில் விட்டுக்கொடுத்து, ஒன்றுபட்டு ஏன் ஒரு "வீர வேட்டுவக் கவுண்டர் பேரவையை" ஒரே மேடையில் அமைக்க முன்வரக்கூடாது?** அப்படி வந்தால் கண்டிப்பாக நம்மால் ஒரு சமுதாய அரசியல் புரட்சியை வெகு விரைவில் ஏற்படுத்த முடியும் என்பதற்கு காலம் பதில் சொல்லும் என்ற காலம் வெகு தொலைவில் இல்லை. இது சத்தியம். நம் சமுதாயத்திற்காக எந்த தியாகத்தையும் செய்யத் துடிக்கும் ஒவ்வொரு இளைஞனும் பேரவையின் பின் நிற்பார்கள். கூடவே,

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!

ஒற்றுமையில்லையேல் நம் அனைவருக்கும் தாழ்வு!

**சிந்திப்பீர்களா?**

இப்படிக்கு

K.R.S.மணிகண்டமயில்வேல்

கள்ளிப்பாளையம்

புன்செய் புளியம்பட்டி சுற்றுவட்டார

வேட்டுவக் கவுண்டர் சார்பாக.